டாக்டர் ர.சீதாராமன் அவர்கள் வாஷிங்டன் கல்லூரியில் நடைபெற்ற 229வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு கௌரவ டாக்டர் பெரும் போது பேசிய உரையின் தமிழாக்கம் பின்வருமாறு :






நான் இந்த நிலைமையிலே உங்கள் முன்னே நிற்பதற்கு முதுகெலும்பாக இருக்கும் வாழ்வில் நான் கடைபிடித்துவரும் சில கொள்கைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதுவரை எனது வாழ்க்கை இந்தக் கொள்கைகளால் உருவாக்கப்பட்டதுவே. நான் விரும்புவதெல்லாம் இந்த கொள்கைகளில் ஏதாவது ஒன்றையேனும் யாரேனும் உடன்எடுத்துச் சென்று கடைபிடித்தால் நான் இங்கிருப்பதின் நோக்கம் பூர்த்தியாகும்.

எனது வாழ்க்கை யாவருக்கும் உத்வேகத்தை (தூண்டுதலை) அளிக்கும் என அகந்தையோடு நான் கூறவில்லை. ஆனால் சமுதாயத்தில் பிற்பட்ட சூழ்நிலையில் வெகு தூரத்தில் உள்ள இடத்தில்

வாழ்ந்து கொண்டிருக்கும் சில சிறுவர்களுக்கு எனது வாழ்க்கையின் அமைப்பு என்னை உருவாக்கிய மாதிரி புதிய சக்தியையும் மன தைரியத்தையும் கொடுக்கும். ஒரு வேளை இந்தக் கொள்கைகள் அந்த இள நெஞ்சங்களை அடிமைப் படுத்திக் கொண்டிருக்கும் மாயையான பிற்போக்கு மனப்பான்மையயும், பலவீனங்களையும் உடைத்தெரிய உதவி செய்யும் அப்போது தான் மனிதன் தன்னைத் தானே' உணர்ந்து கொள்ளும் இலக்கு பூர்த்தியாகும்.

**பிரபஞ்சம் நமக்குள்ளேயே இருக்கிறது**



பொருளாதாரத்தில் ஏழ்மையான, அறிவாற்றலில் செழிப்பான குடும்பத்தில் நான் பிறந்தாலும் சிறுவயது முதற் கொண்டே உயர்ந்த பண்புகளை ஆழப்பதிய வைத்தவனாகவே வளர்ந்தேன்.

நமக்குள்ளேயே ஒரு முழு பிரபஞ்சம் இருக்கிறது என்பதை எப்போதும் நான் நம்பினேன். அந்தப் பிரபஞ்சம் எனப்படுவதும் சக்தி வாய்ந்த கடவுள் எனப்படுவதும் எனது பெற்றோர்களே. நான் பிறந்து வளர்ந்த இடத்தினிலே போதிக்கப்பட்டது மாதா பிதா குரு தெய்வம் என்பதே! அதாவது வாழ்விற்கு இன்றியமையாதது பெற்றோர்களும், ஆசிரியர்களுமே. அதில் விளக்குவது தாயும் தந்தையும் முதலிலும், பின்னர் ஆசிரியரும் கடைசியாக நாம் வணங்கும் மதக் கடவுளும் என்பதே. மனிதனாக இச்சமுதாயத்திற்கு நமக்குள் இருக்கும் நல்லவைகளை உடனிருக்கும் மனிதர்களுக்கும் கொடுப்பதாக உறுதி கொள்ள வேண்டும். உனது வாழ்க்கையின் நன் நடத்தைக் கொள்கைகளைப் பெற்றோர்கள் அடித்தளமாக இட, பின்னர் அதுவே நல்ல நெறிமுறைகளுடன் உலகளவிலான நிர்வாகத்திறமையுடன் கூட்டு நிறுவனங்களில் பணிசெய்ய இயல்கிறது. தன்னைத்தானே உணர்ந்தபின் மனிதன் உச்ச நிலையடைந்து உயரச் செல்ல, பெற்றோர்கள் நமக்குள் உருவாக்கிய நற்குணங்களும், நன்னெறிகளும் முயற்சிகளும், அனுபவங்களுமே உதவும்.

*இலக்குகள் நிர்ணயித்தல்*



*தனி* மனிதனின் வாழ்நாளின் சிறந்த முதலீடு கல்விதான் என்பதை நான் எனது சிறிய வயதிலேயே உணர்ந்து கொண்டேன். இதன் காரணமாகவே எனது இல்லத்திலிருந்து *பத்து* கிலோ மீட்டர் தொலைவில் இருந்த ஒரு நல்ல பள்ளிக்கூடத்தை நான் படிக்க தேர்ந்தெடுத்தேன். எனது கல்விக்காக எனது தந்தை மாதாந்திரம் தனது சம்பளமான 75 ரூபாயிலிருந்து 25 ரூபாயை செலவு செய்தார். எனது வாழ்க்கையின் எல்லா சந்தர்ப்பங்களிலும் தொழிலிலும் கல்விதான் அதன் முதலீ*டுதான்* பலனளித்தது.

நான் முக்கியமான, சரியான செயல்திட்டத்துடன், ஜாக்கிரதையாக பொருத்தமான முதலீடு செய்வதன் அவசியத்தை கற்றுக் கொண்டேன் எதிர்காலத்திற்காக சரியான செயல் திட்டத்துடனும், சரியான நேரத்திலும் முதலீடு செய்தால் அதன் பலன்களை பெறலாம்.

வாழ்விற்குத் தேவையான பொருட்களின் விலைகளும், கல்வி,பயிலக் கட்டணங்களும் உயர உயர எனது பெற்றோர்கள் என் கல்விக்கும் எனது உடன்பிறப்புகளின் கல்விக்கும் செலவு செய்ய கடினப்படுவதைக் கண்டேன். அப்போது தான் நான் என் கல்விக்கான பொறுப்புக்கள் இனி எனதே என உணர்ந்தேன்.

அப்போது நான் 8-ம்வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். எனக்கு ஒரு பெரிய சவால் எதிர்கொண்டிருப்பதை உணர்ந்தேன். நான் பள்ளித்தலைமை ஆசிரியரிடம் இது பற்றி பேசிய போது அவர் என்னிடம் இந்த எட்டாம் வகுப்பு இறுதித் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவனாக வந்து தேர்ச்சியுற்றால் வரும் 9-ம்வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரை பள்ளிச் சீருடையுனும் தங்கும் விடுதியுடனும் இலவசமாகப் படிக்கலாம் என்று உரைத்தார். அவசியம் / தேவை என்பதே எல்லா கண்டுபிடிப்புகளுக்கும் தாயானது. பின்னர் எனக்கெதிரே இருந்த சவாலை ஏற்றுக்கொண்டு கல்வியிலும், தொழிலிலும் முன்னேற முடிவு செய்தேன்.

நான் எப்போதும் கல்வியில் ஆர்வமுள்ளவனாகவும் ஒழுங்கானவனாகவும் இருந்தது எனது இலக்குகளை நோக்கி பயணம் செய்ய முடிந்தது. படிப்படியாக என் குறிக்கோள்களில் வெற்றிபெற திட்டமிட்டேன், இன்னும் கூட தோகா வங்கியின் தலைமைச்செயல் (அலுவலராக) அதிகாரியாக இடை இடையே இலக்குகளை அமைத்து, முயற்சியுடன் வெற்றிக்கு வழி வகுத்து உழைக்கின்றேன். சிந்தித்து பெரிய கனவுகளைக் காண்பதே வாழ்க்கையின் தத்துவமாகக் கொள்ளவேண்டும்.

## *அர்ப்பணிப்பு மற்றும் உறுதியை வழியாய் கொண்ட சிறுவன்*



வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஏற்றத்தாழ்வுகள் எத்துணை எதிர் கொண்டாலும், சிந்தித்து உழைப்பதே உனது செல்வத்தின் சாவி போன்றதாகும். உந்தன் கனவுகள் குறுக்கு வழிகளால் நிஜமாகாது. அதற்காக மன உறுதியும் வியர்வை தரும் உழைப்புமே பலன் தரும்.

நான் 8 – ம் வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற்ற மாணவனாக கடினமாக உழைக்க வேண்டி இருந்தது. இந்த கேள்விகளே எனது வாழ்க்கையை முன்னேற்றப் பாதையில் செல்ல வைத்தது அந்த நினைவுகளே வாழ்க்கையில் ஈர்ப்பையும் திட்டமிட்டு செயல்படும் தன்மையையும் தந்தது. இந்த உறுதியும் பொருமையுமே என்னை உள்ளிருந்து நான் செய்யும் அனைத்திலும் இயக்கும் சக்தியாகச் செயல்பட்டன.

பரீட்சைகள் வந்தன. அனைத்துப் பாடங்களது தேர்வினையும் நன்றாக எழுதினேன். உறக்கமில்லாது நான் படித்த இரவுகள் நிச்சயமாக எனக்கு உதவின. எனது கடைசி பரீட்சை கணிதம் நான்

என்னை முழுமையாகத் தயார் படுத்தி நன்றாக கடைசி பரீட்சையை எழுதக் காத்திருந்தேன்.

காலை வழக்கம் போல 8.30 மணியளவில் பேருந்து நிற்குமிடத்தில் காத்திருந்தேன் எனது பரீட்சை நேரம் காலை 10மணி முதல் பகல் 1 மணி வரையாக மூன்று மணி நேரம்.

9 மணி வரை காத்திருந்தும் பேருந்து வராததால் பயத்துடன் நம்பிக்கையிழந்து வேறு ஏதாவது ஊர்தியில் தான் பள்ளிக்குச் செல்லவேண்டுமென உணர்ந்து இல்லத்திற்கு ஓடி வந்து எனது (சைக்கிளில்) இரு சக்கர வாகனத்தில் முழு சக்தியையும் உபயோகித்து மெதித்து புறப்பட்டேன். 2. கிலோ மீட்டர் சென்ற நிலையில் சைக்கிளின் டயர் வெடித்துவிட்டது. இன்னும் 30 நிமிடங்களுக்குள் பரீட்சை கூடத்திற்கு செல்ல நேர*மிருந்ததால்* எனது சைக்கிளை சாலையின் ஓரத்திலேயே விட்டு விட்டு பள்ளிக்கு ஓடினேன். எனது உடலும், கால்களும் சோர்ந்த நிலையிலும், என்னுள்ளே இருந்த சக்தி என்னைத் துரத்தியது. நான் 8 கி. மீட்ட்டர் ஓடியும் அரை மணி நேரம் தாமதமாகவே பள்ளி சென்றடைந்தேன்.

எனது தொடர்சியான பயமற்ற வேண்டுதல்களால் தலைமை ஆசிரியர் கடைசியாக பரீட்சைக் கூடத்திற்குள் நுழைய அனுமதி தந்தார். நான் சோர்வாகவும் சக்தி இழந்தும் இருப்பினும், எனது புத்தி உறுதியாகவே இருந்தது. சொல்லாதே, செய் எனும் மனப்பாங்கு எனது அறிவிற்கு தேவையான சக்தியை தந்து பரிட்சையை 2 மணி 15 நிமிடங்களில் முடிக்க இயன்றது. எனது திட்டமிட்டு தயார்படுத்தும் முறை எனக்கு துணையிருந்தது. அந்த நாட்களை நினைத்துப் பார்க்கையில் வெறும் எனது கல்வித்திறனும், செயல்திறனும் மற்றுமல்ல. இதைவிட அவசியமான தேவையான பாடம் ஒன்றை நான் கற்றுக் கொண்டேன். அதுவே, நீ வாழ்க்கையில் பல நூறு தடங்க*லை* சந்தித்தாலும் நம்பிக்கையை விட்டு விடாதே நீ சந்திக்க வேண்டிய இலக்கை நோக்கி சோர்வில்லாமல் உழை. நான் திரும்பிப்பார்க்கையில் எனது வெற்றிக்கு (முக்கியமானது) அவசியமானது அன்று நான் பள்ளிக்கு ஓடி சென்று பரீட்சை எழுதியதே. தவிர்க்க முடியாத சந்தர்பங்களிலும் சவால்களிலும் மனதில் உ*று*தியிருப்பின் தாண்டி வரலாம். ஆயினும் தற்போதும் தோகா வங்கியில் எப்படியும் நல்ல முறையில் வழக்கமான வேலைகளை நிர்வாகித்தாலும் நாம் கவனத்தோடு வெறிப்புறச் சூழ்நிலைக்கேற்ப நம்பிக்கையோடு இருப்பதால் எதிரபாராத இன்னல்களிலிருந்து தாண்டி வரலாம். நமக்கு வெற்றி வேண்டும் என்ற மனஉறுதி அத்தனை சக்தி வாய்ந்ததாக இல்லாததால் தோல்வி நம்மைத் தழுவிகிறது. எனவே நாம் மனஉறுதியுடன், திடமான நோக்கத்துடனும் நமது இலக்கை நோக்கி திறனுடன் உழைப்போம்.

## *அறிவுச்செல்வம்  மற்றும் கடின உழைப்பின் முக்கியத்துவம்*





வெற்றிகரமாக வருடத்து முதல் மாணவனாக வந்ததால் மூன்று வருடங்கள் இலவசமாக படிக்கவும், விடுதியில் இலவசமாகத் தங்கவும் இயன்றது. நாம் படிப்படியாக முன்னேற தடையாக இருப்பது நாம் கடின உழைப்பிலும், விடா முயற்ச்சியிலும் அலட்சியமாக இருப்பது தான்.

நான் 9-ம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போது என்னைக் காத்துக் கொள்ள பகுதி நேர வேலை செய்தேன். எனது வருமானம் வாரத்திற்கு 9 ரூபாய். அதில் 8 ரூபாய் குடும்பச் செலவிற்காக அன்னையிடம் கொடுத்துவிட்டு மிகுதி ஒரு ரூபாயை வார முடிவில் எனது கிராமத்திற்குச் செல்ல பயணச் செலவிற்காக வைத்துக் கொண்டேன்.

அதே நேரத்தில் 11-ம் வகுப்பு மாணவர்களுக்கும் படிப்பு சொல்லிக் கொடுத்து தந்தேன். அதனால் எனக்கு இரண்டு வகைப் பயன் கிடைத்தது. ஒன்று அவர்களுக்கு படிப்பு சொல்லிக் கொடுக்கும் போதே நானும் கற்றுக் கொண்டேன். இரண்டாவதாக அவர்களிடமிருந்து இலவசமாக புத்தகங்கள் கிடைத்தன. நமது அறிவைப் பகிர்ந்து கொள்ள இந்த அடித்தளங்களே தூண்டுதலாக இருந்தது.

இந்த அடித்தளங்களே தோகா வங்கியில் அறிவைப் பகிர்ந்து கொள்ள, நாங்கள் கலந்தாலோசிக்க உதவியாக, எல்லோர்க்கும் தெரிந்ததாக உள்ளது. கடின உழைப்பும், அறிவைப் பகிர்ந்து கொள்வதும் தோகா வங்கியில் ஒரு தத்துவமாகக் கொண்டு எங்கள் இலக்குகளை அடைய முயல்கிறோம் இன்றும் கூட தினமும் 10 மணி நேரம் அல்லது 12 மணி நேரம் நிர்வாகத்திற்காக உழைப்பதில் குறியாக உள்ளேன். அறிவைப் பகிர்ந்துகொள்ளும் குணம் தூண்டுவிப்பதால் எனது சகதொழிலாளர்களுட*னும்* தகவல் துறையுடனும் வங்கியின் பங்குதாரர்களுடனும் செவ்வனே கலந்துரையாடுகிறேன். கடின உழைப்பே ஆத்ம திருப்திக்கும், சந்தோஷத்திற்கும் மன நிறைவிற்கும் நிச்சய காரணமாகும்.

## இரக்க குணம்



இரக்க குணம் என்ற நல்ல எண்ணம், தனிமணிதனை சுயநலத்திலிருந்து பொதுநலத்தை தழுவ உதவுகிறது. உதாரணமாக ஒரு சமயம் என் குடும்பத்திற்கு 2 டின் மண்ணெண்ணய் தேவைப்பட்டது. அதை நான் அடுத்த வார இறுதியில் கிராமத்திற்கு வரும் போது கொண்டுவருவதாகக் கூறினேன். பேரங்காடியில் விலை விசாரித்த போது ஒரு டின் மண்ணெண்ணெய் விலை. 4-*1/2* ரூபாய் என்*று அறிந்தேன்.* 10 கிலோ எடையுள்ள அதைக் கொண்டு செல்ல, பயணச் சிலவிற்குப் பணம் தேவை. எனது வீடு 10 கீ.மீ. தொலைவில் இருந்தாலும் மண்ணெண்ணெய் வீட்டிற்கு மிகவும் அவசியம், என்பது உறுத்தியதால் ஏதாவது மாற்று வழிக்காக சிந்தித்தேன்.

2 டின் மண்ணெண்ணய் வாங்கி அதை எடுத்துக் கொண்டு நடந்தே வீட்டிற்கு சென்றேன். வீடு சென்றடைய 3 *1/2* மணிநேரம் ஆகியது. குடும்பத்தின் மேல் எனக்கிருந்த அன்பும், பரிவுமே எனக்கு சக்தி தந்து நடக்க வைத்தது. வீட்டில் இரவு உணவருந்த என்னால் உட்காரக்கூட முடியவில்லை. எனது கைகளும் கொப்பளங்களாகி விட்டன. எனது கைகள் எரிந்து கொண்டிருந்தாலும் எனது மனமோ என் தாய்க்கு நான் அளித்த வாக்கினை நான் நிறைவேற்றியதால் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் இருந்தது. குடும்பத்திலுள்ள வேதனைகளைப் பார்க்கும் போது பரிவும் இரக்கமும் நம் வீட்டிலிருந்தே துவங்குகிறது. அவர்களது துன்பங்களை நாம் பகிர்ந்து கொள்ளும் போதும் உதவும் போதும் குடும்பத்திற்கு உறுதியான சக்தி கிடைக்கிறது.

கடந்த காலத்தில் எனக்கிருந்த இவ்வகையான இரக்க குணங்கள் என்னுடன் பணிபுரியும் மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள உதவியது. இப்போதும் கூட நான் எதைச் செய்தாலும் எனது வார்த்தைகள் உண்மையோடும், நாணயத்தோடும் இருக்கவே விரும்புகிறேன். தோகா வங்கியில் பணிபுரியும் சக தொழிலாளர்ளை

குடும்பத்தின் ஒரு பகுதியாக நினைத்து பரிவுடனும் மரியாதையுடனுமே நடத்துகிறோம்.

*திறன்கள் அபிவிருத்தி*



எனது குழந்தைப் பருவத்திலிருந்தே இயல்பாகவே கற்றுக் கொள்வதிலும் வளர்ச்சியிலும் தூண்டுதல் கொண்டவனாக இருந்தேன். ஒரு மனிதனுடைய செயலாற்றலும் கடமையும் உண்மையாக ஒருவனின் வளர்ச்சியும் ஆற்றலுமாகும் மனிதனின் வாழ்க்கை நடப்பிற்கு எல்லாவிதமான திறமைகளை வளர்த்துக் கொள்வது அவசியமாகும்.

எனது கட்டுக்கடங்கா விருப்பத்தாலும், படிப்பிற்காகவும்,வாழ்க்கையின் தேவைக்காவும் ஓர் கலை அரங்கத்தில் பணிபுரிந்தேன் அரங்குகளில் நாடகங்களில் பணி புரிந்ததற்காக முதலில் ஒரு அறவை இயந்திரத்தை பரிசாகப் பெற்றேன் வீட்டிற்காக இம்மாதிரி பரிசுப் பொருட்கள் உண்மையிலேயே என்னை ஊக்கப்படுத்தின. மேலும் எனக்கு பெருமை தந்ததோடு மட்டுமின்றி ஒரு சாதனை செய்த உணர்வு தெரிந்தது. அம்மாதிரியான கலைகளில் பங்கேற்பது ஒருவனது தகுதியை வளர்த்துக் கொள்ள அவசியமானது. வினாடி வினா,பேச்சுப்போட்டி இசைப்பயிற்ச்சி நுண்கலைகள்,நாடகம் போன்றவைகள் நமது அறிவைத் தீட்டவும், மெருகேற்றவும் உதவுகின்றன.நமக்கு இவைகள் நமக்கு *பிரசத்தி பெற்ற* பெயர்தருகிறது

நம்மைச் சுற்றி நடக்கின்ற நிகழ்ச்சிகளில் நம்மை சுறுசுறுப்போடு ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம்- ஆலோசிப்பது, ஆராய்வது , பிரதிபலிப்பது போன்றவைகளில் நம்மை *நாம்* வளர்த்துக் கொள்ள முடிகிறது.

இன்றுகூட இயன்றவரை கற்றுக் கொள்வதை குறிக்கோளாக கொண்டுள்ளேன். பொருளாதாரத் தகவல் துறைகளிலும், கூட்டு நிறுவன அழைப்புகளிலும் திறமையாக தொடர்பு கொள்வதும் தெளிவாகப் பேசுவதும், நான் பங்கேற்ற இதர கலைகளின் மூலம் பெற்ற தன்னம்பிக்கையும் தைரியமும்.. தோகா வங்கியில் நாங்கள் தொழிலாளர்களை அதிக திறமைகளை வளர்த்துக் கொள்ளும் *படி* தொடர்ச்சியாக வலியுருத்துகிறோம். நாங்கள் தரமான தனி மனித வளர்ச்சிக்கு எப்போதும் துணை நிற்போம்.

*<u>எப்படி கடன் கொடுப்பது - பாடம் படித்தது</u>*



எனது தொடர்ந்த கடின உழைப்பாற்றலாலும் ஆழ்ந்த ஈடுபாடுகளும், தொடர்ச்சியாகப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் வெற்றி காண முடிந்தது. சிறிய சிறிய பரிசுகள் என்னை உற்சாகப் படுத்தின. எனக்கு அரசாங்க உதவித் தொகையாக 400 ரூபாய் பெற்ற போது பெரிதும் மகிழ்ந்தேன். அப்போது தான் எனது நண்பர்களில் ஒருவன் அவசர உதவி கேட்டேன். அவனது தவிர்க்க முடியாத பணத்தின் தேவை *எனக்குத்* தெரிந்தது. எனக்குள் இருந்த இரக்கம் அவனுக்கு பணம் தரக்கூறியது.

எனது நண்பன் நான் கொடுத்த பணத்தை எடுத்துக் கொண்டு குடும்பத்தை விட்டே ஓடிவிட்ட செய்தியறிந்தேன். எனது நண்பனின் தந்தையைச் சந்தித்துக் கேட்ட போது அவர் எனைக் கேட்ட கேள்விகள்;-

உனது நண்பனைப் பற்றியும் அவனது சுற்றுச் சூழலைப் பற்றியும் விசாரித்தாயா என்றார். பணத்திற்காக பாதுகாப்பு ஏ*தேனும்* கேட்டாயா? பணம் கொடுக்கும் முன் இதைப் பற்றியெல்லாம் சிந்தித்தாயா?

என்றார்.பணம் கொடுப்பதற்கு முன் வாங்குபவர்களின் குணாசியங்களையும், தகுதியையும் பிணையத் தொகையும் (பொருளும்) பற்றி விசாரிக்க வேண்டும் *என அப்போதுதான்* நான் புரிந்துகொண்டேன்

இப்போது கூட்டு ஒப்பந்தமும் பணம் கொடுக்கும் முன் மிக்க அவசியமானது என அறிந்து கொண்டேன். ஒரு வங்கியாளனுக்கு மிக முக்கிய பாடம் இக்கட்டான வேளைகளில் எப்போது கடினமான முடிகளை *எடுக்க* வேண்டும் . எனப் புரிந்து கொள்வ*தே..* மிக அதிகமான ம*று* கட்டமைப்பு பணிகளில் நான் கற்றுக்கொண்ட அடிப்படை*க்* கொள்கைகளை உபயோகிக்க தவ*ற* **மாட்டேன்.** வாழ்க்கையில் கற்றுக் கொள்ள கடினமானது, எந்தப் பாலத்தை கடப்பது, எதைக் கடவாதிருப்பது என்பதே.

## *குழுத் தலைமை*



ஒரு குழு என்பது வெறும் மனிதர்களின் கூட்டம் மட்டும் அல்ல.அது நடை முறையில் ஒவ்வொருவரும் தனது கருத்துக்களை பரிமாறிக்கொள்வதே ஆகும். ஒரு குழுவின் வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனிமனிதனுடய கடமையுணர்ச்சியும் மொத்த குழுவினரின் முழு முயர்ச்சியுமே ஒரு குழுவையும்,ஒரு தொழிற்ச்சாலையயும்,ஒரு சமுதாயத்தையும் உயர்த்த உதவும்.

குடும்பம் என்பது பல கருத்துக்கள் கொண்ட தனி மனிதர்கள் ஒரே கூரையின் கீழ் ஒன்றாகச் சேர்ந்து வாழ்வதே.ஆண்,பெண் என வேறு பட்ட பாலின வித்யாசங்களுடனும்,வயது வித்யாசங்களுடனும், வலிமயுள்ளோரும்,வலிமயற்றோறும் அதே வீட்டில் வாழ்ந்து வருகிறார்கள்.அதிலே அனுபவமுற்றோரும்,குறைந்த அனுபவம் கொண்டோரும் வாழ்கிறார்கள். இருப்பினும் ஒரு குடும்பமாக நாம் அனைவரும் ஒன்று எனவே உணர்கிறோம்.இந்த ஒன்று படும், ஒற்றுமை உணர்வே,ஓர் குழுத் தலைமைக்கு வழிகாட்டியாகவும்.ஒரு ஆரம்பமாகவும்,

கூட்டு நிறுவன உலகில் பயணணம் செய்யவும் உறு துணையாக உள்ளது.

ஒரு நிர்வாகக் குழு தனது இலக்குகளில் வெற்றி பெற, சக தொழிளாலர்களை நன்றாகப் புரிந்து கொள்வதும்,அவர்களின் பலம்,பலமின்மை பற்றி தெரிந்து கொள்வதும் மிக அவசியமானது.

இந்த கூட்டு நிறுவனங்கள் நிரைந்த உலகிலும் கூட,நாம் இதே கருத்துக் கணிப்புகளின் நல்முறைகளின் வழியே நமது குடும்பங்களில் கடை பிடித்த மாதிரி நிர்வாகக் குழுவினையும் நடத்திச் செல்லலாம். திரு.ஹென்றி ஃபோர்ட் அவர்கள் கூறிய சரியான வாக்குப் படி “ ஒன்றாக இணைந்து வருவதே நல்ல துவக்கம்,ஒன்றாக இணைந்திருப்பதே ஒரு வளர்ச்சி,ஒன்றாக இணைந்து பணி புரிவதே வெற்றிக்கு அரிகுறி” என்ற சரியான பாடங்களை கற்றுக் கொள்வது மிக அவசியம்.

*குடும்பம் மற்றும் சமுகத்திக்கான  அர்ப்பணிப்பு*





ஒவ்வொன்றும் மற்றொன்*றோடு* இணைக்கப்பட்டுள்ளது என்ற சொற்கள் இயற்கை இய*லின்* முதல் சட்டமாகும். அடுத்தவர்களை சமமாகவும் மரியாதையாகவும் நடத்துவதன் மூலமே இந்த 21ம் நூற்றாண்டில் மனித சமுதாயம் வளர்ச்சியுடனும் நிறைவான வாழ்வுடனும் இன்றைய சுற்றுச் சூழ*லில்* இருக்க இயலும்.

நான் அந்த நாட்களில் சந்தித்த சவால்களே என்னை ஒரு நல்ல மனிதனாக உருவாக்கியது. பொருளாதரத்தில் எனது குடும்பம் ஏழையாக இருந்தாலும் நாங்கள் மகிழ்வான திருப்தியான குடும்பத்தினராக*வும்* ஒருவருக்கு ஒருவர் பாசமும் மதிப்பும் கொண்டவராக*வும்* இருந்தோம். நான் இதையே சமுதாயத்திற்கும் வீட்டிற்கும் மொத்தமாக திரு*ப்பிச்* செய்தேன். சமுதாய நலத்திற்காகவும் உடனிருக்கும் மனிதர்களின் முன்னேற்றத்திற்காகவும் வேலை செய்வது என்னுள் ஒரு ஆத்ம திருப்தியை தருகிறது. கூட்டு நிறுவனங்களில் படிப் படியாக நான் ஏறியபடி எனது குடும்பத்தினரின் பொருளாதரச் சுமைகளைக் குறைத்து எளிதாக்கினேன். அதற்கு கைமாறாகவே குடு*ம்*பத்தையும் சமுதாயத்தையும் ஒன்றாக கவ*னி*த்தேன்.

சமுதாயத்திற்காக நான் செய்யும் உதவிகள் / கடமைகள் வசதி குறைந்தவர்*களை* முன்னேற்றுவது மட்டுமல்லாமல் தனிப்பட்ட நபராக நம்மையும் வளப்படுத்துகிறது. எனக்குள் எப்போதும் தொடர்ந்த நீண்ட கால வெற்றிச் செயல் திட்டம் கனவாக இருந்தது.

எனது தொடர்ந்த, நான் முன்னோடியாக இருந்து எடுத்த முயற்சிகளால் பசுமை நிறைந்த தோகா வங்கியையும், உலக வெம்மைக்கு எதிரான தொடர்ந்த செயல்களையும், தீங்கு விளைவிக்கும் பருவ கால மாற்றங்களை கட்டுப்படுத்த ஆவன

செய்வதிலும் உதவியது. *கூட்டு* நிறுவனங்களின் சமுதாயக் கடமை வெறும் வார்த்தைகளில் அல்ல. அதில் அதிக விருப்பமும், அனுபவங்களும் கொண்ட செயலாக இருக்க வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும், நாம் பணிபுரியும் நிறுவனங்களும் சமுதாயத்தில் பொறுப்புள்ளவைகளாக, கனவுகளும், குறிக்கோள்களும் கொண்டதாக இருக்கவேண்டும். சமுதாயத்திற்கும், பொருளாதாரத்திற்கும் காட்டும் இந்த ஈடுபாடுதான் நமது நாளைய வெற்றிக்கு ஊன்றுகோ*லா*க இருக்கும். கூட்டு நிறுவனங்களின் சமுதாயக் கடமையை ஏற்றுகொள்வதன் மூலம் நமது குறிக்கோள் நிறைவேற நாம் எடுக்கும் பயனுள்ள முறைகள், மனிதசமுதாயத்திற்கும், மனிதர்களுக்காக உழைக்கும் மனிதர்களுக்கும் பயனளிக்கவேண்டும்.

முடிவாக, இளவயதில் நான் எதிர்கொண்ட சவால்கள், என்னை மனப் பக்குவமும், ஊக்கமும் நிறைந்த மனிதனாகவும், எதையும், முயலாமல் விட்டுவிடாத உறுதியுள்ளவனாகவும் முன்னே கடந்து செல்ல உறிதியுள்ள நீண்ட நடைகளைத் தந்தன.

நான் திரும்பிப் பார்க்கையிலே வாழ்க்கையின் கசப்பும் இனிப்பும் நிறைந்த அனுபவங்கள் என்னை இங்கு இப்போது நிற்கவைத்துள்ளது, மட்டுமல்லாமல் நாளைய எதிர்காலத்திற்க்கும் என்னை அழைத்துச் செல்லும்.

இங்கிருக்கும் எல்லோரும் வாழ்க்கையை தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் சவால்களை எதிர் கொண்டு, அதே நேரத்தில் வாழ்க்கையை ஆனந்தத்துடன் அனுபவிக்கவும். இப்படி இருந்தால் நாம் தொழிலிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் தகுதியுள்ள ஒருவராகவும், வெற்றிக்காக உழைப்பவராகவும் இருக்கலாம் வளர்ச்சியும், வெற்றியும், சாதனையும் பற்றி பேசும் பேச்சுக்கள் தொடர்ந்து கா*ணும்* வளர்ச்சியும், முன்னேற்றமும் இல்லை என்றால் யாதொரு அர்த்தமுமில்லை. வெற்றியுடைய, முன்னேற, திட்டமிட்டுச் செல்லுங்கள். வாழ்வில் வெற்றி என்பது பணம் சம்பாதிப்பது மட்டுமன்*று* என்பதை நினைவில் வையுங்கள். வெற்றி என்பது மனிதர்களையும், உடனுள்ள குழுவினரையும், பங்காளர்களையும். நீ கொள்ளும் உறவுக*ளையும்* பற்றியது.உனது வாழ்க்கைப் பாடம் மூலமாக*வே* நீ வெற்றியுள்ள, மதிப்புள்ள மனிதனாக வாழலாம்.

உலகில் உள்ள எல்லா மதங்களும் தங்களது கொள்கையில் வேறுபட்டாலும் ஒன்றுபட்டு உணர்த்துவது உண்மையை தவிர எதுவும் இந்த உலகில் உயிர் வாழ்வதில்லை என்பதையே.

- மகாத்மா காந்தி

